வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையும் உள்ளது. தற்போது இந்தப் பள்ளியில் பெற்றோர்–ஆசிரியர் சங்கத்தின் மூலமாக ஆங்கிலவழிக் கல்வி 11 ஆம் வகுப்பிற்கு தொடங்கப்பட்டுள்ளது. ஆகவே, இங்கு வகுப்பறைகள் அதிகமாக தேவைப்படுகின்றன. எனவே, வகுப்பறைகளையும், கழிப்பிடங்களையும் கட்டித் தர ஆவன செய்ய வேண்டுமென மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வால்பாறை தொகுதியிலே இருக்கிற பெண்கள் மேல்நிலைப் பள்ளியைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அந்த மேல்நிலைப் பள்ளியில் ஆங்கிலவழிக் கல்வியும் கூடுதலாக உள்ளது. ஆகவே, வகுப்பறைகள் கூடுதலாக தேவையென்ற கோரிக்கை இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக அரசு பரிசீலித்து, நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 262, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. மோகன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

262—

நியாய விலைக் கடைகளைப் பிரித்தல்

***34580—திரு. எம்.கே. மோகன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா நகர் தொகுதி, 102–வது வட்டம், குஜ்ஜி தெருவிலுள்ள சிந்தாமணி கூட்டுறவு நியாய விலைக் கடை எண் DB017–ஐப் பிரித்து இரு கடைகளாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2018 ஜூலை 4]

(அ) மற்றும் (ஆ) அண்ணா நகர் தொகுதி, 102–வது வட்டம், பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச்சாலையின் கட்டுப்பாட்டில் குஜ்ஜி தெருவில் 1,363 குடும்ப அட்டைகளுடன் DB017 முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. சென்னையைப் பொறுத்தவரையில், நியாய விலைக் கடைகளுக்கு இடம் கிடைப்பது அரிதாக உள்ளது. பல நியாய விலைக் கடைகளில் 2,000 குடும்ப அட்டைகள் வரை இணைக்கப்பட்டுள்ளன. நகர்ப்புறங்களில் குறைந்தபட்சம் 800 குடும்ப அட்டைகளிலிருந்து அதிகபட்சம் 1,000 குடும்ப அட்டைகள் வரை இருக்கலாம் என்பது அரசின் விதி. ஆனால், DB017 முழுநேர நியாய விலைக் கடையில் 363 குடும்ப அட்டைகள் மட்டுமே கூடுதலாக உள்ளன. எனவே, இந்தக் கடையை இரண்டு கடைகளாகப் பிரிப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. மோகன் அவர்கள்.

திரு. எம்.கே. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களே, அனைவருக்கும் காலை வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா நகர், 102–வது வட்டம், குஜ்ஜி தெருவிலுள்ள சிந்தாமணி கூட்டுறவு நியாய விலைக் கடை எண் DB017–ஐப் பிரித்து இரு கடைகளாக அமைக்க அரசு முன்வருமா என்று கேட்டிருந்தேன். கோரிக்கை வைக்கப்பட்ட நியாய விலைக் கடையில் குறைந்த அளவில் மக்கள் பொருட்களை வாங்க வந்தால்கூட கூட்ட நெரிசல் ஏற்பட்டு விடுகின்றது. எனவே, மக்களின் சிரமத்தைக் கருத்தில்கொண்டு, உரிய ஆய்வு மேற்கொண்டு கடையைப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், வேறு பெரிய இடத்தில் இந்த நியாய விலைக் கடையை இயக்குவதற்கு அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன். இதற்குத் தேவையான இடம் இருக்கிறது; நான் இடம் தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் விவரத்தை மட்டும் சொல்லுங்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—10

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடம் தருவீர்கள்; அந்த இடத்தில் பகுதிநேர நியாய விலைக் கடையை வேண்டுமானால் அமைக்கலாம். ஆனால், முழுநேர நியாய விலைக் கடையை அமைக்க முடியாது. பகுதிநேர நியாய விலைக் கடை என்றால், அந்த விற்பனையாளரே இந்தக் கடையையும் பார்ப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. நீங்களே இடம் பார்த்துத் தரும்போது அதனை இலவசமாகக் கொடுக்க வேண்டும். இதில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய சில விதிகளெல்லாம் இருக்கின்றன. நகரங்களைப் பொறுத்தளவில், கூடுதலாகக் குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நடைமுறை இருக்கிறது. இருப்பினும், விதிவிலக்கு அளித்து, முன்னுரிமை அடிப்படையில், உறுப்பினர் கேட்கின்ற கடையைக் கொடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இலவசமாக இடம் கொடுக்கும்பட்சத்தில், நுகர்பொருட்களை நகர்வு செய்வதற்கான அனைத்துச் செலவுகளையும் உறுப்பினர் அவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். இதற்காக அந்தப் பண்டக சாலை எந்தவிதமான செலவையும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏற்கெனவே சிந்தாமணி பண்டகச் சாலை மிகப் பெரிய அளவில் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. பொதுமக்களுக்கு தரமான பொருட்களை விநியோகம் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில், இன்றைக்கு அரசாங்கம் மானியத்தை அதிகரித்து பொருட்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் சட்ட விதிகளுக்குட்பட்டு இடம் அளிக்கும்பட்சத்தில், அந்தக் கடை அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. மோகன் அவர்கள்.*

திரு. எம்.கே. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கேயே இடமிருப்பதால், அந்தக் கடையை விரிவாக்கம் செய்து கொடுத்தால் போதும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கடையை விரிவாக்கம் செய்து கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார். அந்தக் கடை ஏற்கெனவே*

பெரிய கடையாக இருக்கிறது. இன்னும் விரிவாக்கம் செய்ய வேண்டுமென்றால், மாண்புமிகு உறுப்பினருடைய நிதியிலிருந்து நல்லதாக, புதியதாக, modern ஆக, இன்றைக்கு இருக்கிற நவீன வசதிகளுடன் உறுப்பினர் கட்டிக் கொடுத்தால், வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்.

முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலுள்ள பல முதியோர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். அதாவது, வயதானவர்களில், கணவன் அல்லது மனைவி தவறினால், குடும்ப அட்டையில் ஒரே நபர் இருக்கின்றபட்சத்தில், அவர்களுக்குக் கடைகளில் பொருட்கள் வழங்கப்படுவதில்லை என்றும்; முதியோர் ஓய்வூதியம் வாங்குபவர்கள் அல்லது விதவை ஓய்வூதியம் வாங்குபவர்கள் போன்றவர்களுக்கு பொருட்கள் வழங்கப்படுவதில்லை என்றும் complaint கொடுக்கின்றனர். நான், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புவது என்னவென்றால், திட்டப்படி அவர்களுக்கு அந்த உரிமை இருக்கிறதா, இல்லையா? அதாவது, அவர்களது பிள்ளைகளெல்லாம் வீட்டைவிட்டுச் சென்ற பிறகு, முதியோராக இருக்கும்போது, விதவையாகவோ அல்லது மனைவி இல்லாத கணவனாகவோ இருந்தால், அவர்கள் பொருட்கள் வாங்குவதற்கு உரிமை இருக்கிறதா, இல்லையா? அதுவல்லாமல், அரசாங்கத்திடமிருந்து வேறு ஏதாவது மானியம், widow pension, disability pension அல்லது முதியோர் ஓய்வூதியம் இதுபோன்று பெறுபவர்களுக்கு பொருட்கள் வாங்குவதற்கு உரிமை இருக்கிறதா, இல்லையா என்பது குறித்து தெளிவாகப் பதிலளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் இன்றைக்கு ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார். இதுகுறித்து, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே

தெளிவாக, அன்றைக்கு மானியக் கோரிக்கை நடைபெற்றபோது சொல்லியிருந்தார்கள். அனைத்துக் குடும்ப அட்டைகளும் கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றன. Smart Card System வந்த பிறகு, ஒரு நபர் குடும்ப அட்டை என்பது, பல குடும்பங்களிலிருந்து பிரிந்து கூடுதலாக வாங்கப்பட்டுள்ளது. இப்போது ஒரு குடும்பம் என்பது இரண்டு குடும்பங்களாக ஆகியிருக்கும். அதுபோன்ற குடும்ப அட்டைகளுக்கு எந்தவிதப் பிரச்சினையும் இல்லை. சில குடும்ப அட்டைகளில் மட்டும், சில தவறுகள் நடந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பிரச்சினை நடைபெற்றது மதுரையில் என்றால், எந்தெந்தக் கடைகளில் அதுபோன்ற பிரச்சினைகள் வருகின்றன என்று சொன்னால், துறையின் மூலமாக உடனடியாக ஆய்வு செய்யப்படும். நான் இந்த வாரம் வெள்ளிக்கிழமை அங்கே செல்லயிருக்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்தக் கடைகளில் இந்தப் பிரச்சினை உள்ளதோ, அதுகுறித்து எழுதிக் கொடுத்தால் போதும். அந்தக் கடைகளை உடனடியாக ஆய்வு செய்து, தவறான நடவடிக்கைகள் ஏதேனும் எடுத்திருப்பார்களேயானால், உடனடியாக அதைச் சரி செய்து, உரியவர்களுக்கு அந்தப் பொருட்கள் நியாயமான முறையில் கிடைப்பதற்கு அரசு உறுதியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.

முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே கோரிக்கை ஒன்றைக் கேட்டு, ‘செய்கிறேன்’ என்று சொல்லியிருந்தார்கள். திருக்கோவிலூர் தொகுதி, ஆயந்தூர் என்ற கிராமத்தில் ஒரு புதிய கடை கட்டப்பட்டு ஆறு வருடங்களாகியும் இன்னும் திறக்கப்படாமல் இருக்கிறது. அதைப்போல சென்னங்குணம் கூட்டுறவுப் பண்டகச்சாலையைப் பிரித்துத் தருவதாக நீங்கள் இந்த அவையிலேயே குறிப்பிட்டிருந்தீர்கள். நானும் மாவட்ட ஆட்சித் தலைவரை பலமுறை சந்தித்து இதுகுறித்துப் பேசிவிட்டேன். அருள்கூர்ந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரை தொடர்புகொண்டு, அதிகாரிகள் மூலமாக, இந்த இரண்டு கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

2018 ஜூலை 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கடை அங்கே அமைக்கப்படுவதை அந்தப் பகுதி மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தக் கடையிலும் பிரச்சினை இருப்பதால் யாரும் பொருட்களை வாங்குவதற்கு முன்வரவில்லை. மற்றொரு கடையைப் பொறுத்தளவில், குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை குறித்து விதிகள் திருத்தப்பட்டு, பொருட்களைக் கொடுப்பதற்கு, மாவட்ட இணைப் பதிவாளர் அவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. எனவே, அதை உரிய நேரத்தில் செய்து முடித்து, மாண்புமிகு உறுப்பினருக்கு நேரடியாகச் சொல்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

முற்பகல் 10–15

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையக் கூடாது. குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகளாவது ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையில் இருக்க வேண்டும்; ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டுமென்று இந்தத் திட்டத்தில் சொல்லப்படுகிறது. ஒரு கிராமத்தில் 5, 6 துணைக் கிராமங்கள் இருக்கின்றன. ஆகவே, அந்தத் துணைக் கிராமங்களில் இருக்கின்ற ஏழையெளிய மக்களெல்லாம், அவர்களுக்கென்று தனியாக பகுதிநேரக் கடை அமைக்க வேண்டுமென்று கேட்கின்றனர். ஆனால், 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற ஒரே காரணத்தால், அங்கு கடைகள் பிரித்துக் கொடுக்கப்படாமல் இருக்கின்றன. ஆகவே, தமிழ்நாட்டிலிருக்கின்ற அத்தனை துணைக் கிராமங்களிலேயும் பகுதிநேர நியாய விலைக் கடைகளைத் திறக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? வீடு தேடி ரேஷன் பொருட்களை வழங்கக்கூடிய நிலைமையும், அனைத்துப் பொருட்களையும்* online *மூலமாகக் கொடுக்கிற நிலைமையும் இக்காலகட்டத்தில் இருக்கின்றன. ஆகவே, அனைத்து துணைக் கிராமங்களிலும் பகுதிநேர நியாய விலைக் கடைகளைத் திறக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குறைந்த எண்ணிக்கையிலான குடும்ப அட்டைகள் இருந்தாலும் அந்தப் பகுதிக்கும், வீடு தேடிச் சென்று பொருட்களை வழங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வந்ததற்குப் பிறகு, 2,293 நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. மேலும், 42 நகரும் நியாய விலைக் கடைகள் மூலமாகப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதியிலேகூட ஒரு நகரும் நியாய விலைக் கடை மூலமாகப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. ஏறத்தாழ 9 ஆயிரம் குடும்ப அட்டைகளுக்கு தற்போது வீடு தேடிச் சென்று பொருட்களை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எந்தப் பகுதியில் அமைக்க வேண்டுமென்று குறிப்பிட்டுச் சொல்கின்றபட்சத்தில், கூடுதலாக நகரும் நியாய விலைக் கடைகளை அமைப்பதற்கு அரசு பரிசீலிக்கும்.

திருச்சி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், பெரிய பழமலை, சின்ன பழமலை ஆகிய மலைக் கிராமங்கள் இருக்கின்றன. அங்கு, 86 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கின்றன. ஆனால், அங்குள்ள மக்களின் வீட்டிற்கே சென்று, மாதத்தில் இரு நாட்கள் ரேஷன் பொருட்களை வழங்குகின்ற அரசு, இந்தியாவிலேயே, தமிழகத்தை ஆளும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, திருப்பூர் மாவட்டத்தில் மாவடைப்பு, புளிப்பட்டி என்றழைக்கப்படும் மலைக் கிராமங்கள் உள்ளன. மாவடைப்பு என்ற பகுதி 65 கி.மீ. தூரத்தில் உள்ளது, புளிப்பட்டி என்ற பகுதி 70 கி.மீ. தூரத்தில் உள்ளது, இதுபோக, மலைப் பிரதேசங்களும் இருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான், இந்த மலைப் பிரதேசங்களிலுள்ள கிராமங்களில் இருக்கின்றவர்களுக்குக்கூட இராவணபுரம் தொடக்கக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் மூலமாக இலவசமாகப் பொருட்களை தங்குதடையின்றி, மாதத்தில் 4 நாட்கள் கொண்டு சென்று கொடுக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்தக் கடைகளுக்கு இதுபோன்ற வசதி வேண்டும் என்று குறிப்பிட்டுச் சொன்னால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடு) பஞ்சாயத்துகளில் உள்ள அனைத்துக் கடைகளுக்கும் செய்ய முடியாது. பக்கத்திலேயே கடையைக் கொடுத்தாகிவிட்டது, எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. அதுபோன்று இருந்தால், துறைரீதியாக ஆய்வு செய்து, கூடுதலாகக் கடைகள் அமைக்கப்படும். மலைப் பிரதேசமாக இருந்தால், மக்கள் எளிதில் அணுக இயலாத கடைகளாக இருந்தால், போக்குவரத்து வசதி இல்லாமல் இருந்தால், கடை வெகு தூரத்தில் இருந்தால், அதுபோன்ற இடங்களைக் கண்டறிந்து இன்னும் கூடுதலாக நகரும் நியாய விலைக் கடைகளை அமைப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, உறுதியாக துறைரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 263, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

263—

தரம் உயர்த்துதல்

***7250—திரு. ப. பலராமன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, பொன்னேரி பேரூராட்சியில் உள்ள 33 KVA துணை மின் நிலையத்தை 110 KVAதுணை மின் நிலையமாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பொன்னேரி தொகுதி, பொன்னேரி பேரூராட்சியில் உள்ள 33 KVA துணை மின்